சார்பு நீதிமன்றம். விருதுநகர்

H.M.O.P.No:156/2023 Date: 01.09.2025

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி-1(R.W.1)ன் வாக்குமூலம் (1872ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144 வது பிரிவின்படி திருமதி.பேச்சியம்மாள், நாசர் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது)

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : விக்னேஷ்வரன் | சாதி | : | -- |
| த/பெ | : கண்ணன் | சமயம் | : | -- |
| கிராமம் | : | தொழில் | : | |
| தாலுகா | : | வயது | : | |

முதல் விசாரணை

நான் இம்மனுவில் எதிர்மனுதாரர் ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை என் சாட்சியத்தின் ஒரு பகுதியாக வாசித்துக்கொள்ள வேண்டுகிறேன். மனு விபரங்கள் தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். எனக்கும், மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணத்திற்கு ஆதரவான திருமண பத்திரிக்கை தாக்கல். நானும், மனுதாரரும் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் **எ.ம.சா.ஆ.1.** எனது ஆதார் அடையாள அட்டை நகல் **எ.ம.சா.ஆ.2**(அசலுடன் ஒப்பிடப்பட்டது). எனது குழந்தை கீர்த்தன் பிறப்பு சான்று நகல் **எ.ம.சா.ஆ.3.**(அசலுடன் ஒப்பிடப்பட்டது). எனது இரண்டாவது குழந்தை வருண் வாசுதேவ் பிறப்பு சான்று **எ.ம.சா.ஆ.4.**(அசலுடன் ஒப்பிடப்பட்டது). முதல் குழந்தையான கீர்த்தன் என்பவரின் ஆதார் அடையாள அட்டை நகல் **எ.ம.சா.ஆ.5**(அசலுடன் ஒப்பிடப்பட்டது). இரண்டாவது குழந்தையான வருண் வாசுதேவ் என்பவரின் ஆதார் அடையாள அட்டை நகல் **எ.ம.சா.ஆ.6**(அசலுடன் ஒப்பிடப்பட்டது). மனுதாரர் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த HMOP.No.156/2023 மனு நகல் **எ.ம.சா.ஆ.7**. மேற்படி

மனுவிற்கு நான் தாக்கல் செய்த எதிருரை **எ.ம.சா.ஆ.8**. நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தை ஏற்று மனுதாரர் தாக்கல் செய்துள்ள HMOP.No.156/2023 மனுவை தள்ளுபடி செய்தும் மேலும் நான் இந்நீதிமன்றத்தில் மனுதாரருடன் சேர்ந்து வாழ தாக்கல் செய்துள்ள HMOP.No.208/2024 என்ற மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டுகிறேன்.

(மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)